ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1760/9 - 2012 මැයි මස 29 වැනි අඟහරුවාදා - 2012.05.29
*1760/9 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

அனுமதிபெறாது மூன்றுமாத காலமொன்றுக்கு சபையின் கூட்டங்களுக்கு சமுகமளியாமை காரணமாக மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி, வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும் ;

சின்னத்துரை யோகேந்திரலிங்கம் எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த சுயேச்சைக் குழுவின் தலைவர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்குழுவைச் சேர்ந்தவரும், மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட சுயேச்சைக் குழுவின் தலைவர், குறிப்பிட்ட காலத்தில் தனது முடிவைத் தெரிவிக்காததாலும் ;

இப்போது மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் ரத்நாயக்க ராலலாகே அசங்க சதிஸ் குமார ரத்நாயக்க ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான ) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு 2008 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 10 ஆந் திகதி மண்முனை தென்மேற்கு பிரதேச சபைக்காக நடாத்தப்பட்ட தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட கடைசி உறுப்பினருக்கு அடுத்ததாக அதிகப்படியான விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ள திரு. சுப்பிரமணியம் சிவலிங்கம் என்பவர், அவ்வெற்றிடம் ஏற்பட்ட மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

அசங்க ரத்நாயக்க,
தெரிவத்தாட்சி அலுவலர்,
மண்முனை தென்மேற்கு பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
மட்டக்களப்பு,
2012, மே 19.

6 - 507

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.